328

328.

நக்கீரர்

28 FEB 1945

திரு. வி. க. மணி விழா

- மலர் -

2672

வே. கந்தசுவாமி

சை. இராமசாமி

Copyright] 1944 [Price As. 4

திரு. வி. க. மணி விழா மலர்

நக்கீரர்

2472
28 FEB 1945
MADRAS
928.94811

வே. கந்தசுவாமி முதலியார்

மகளிர் சித்திரா, ஷாந்தா திரு. வி. க. வின் மணி விழாவிற்குப்

புனைந்தமாலை.

031, 1ய

எங்கும் இன்னிசை முழக்கம், எங்கும் விளக்குப் பொரித்து ஒளிர் விடும் நிலா வெளிச்சம். மக்கள் நறு மணங்கொண்ட பூ மாலே ஏந்தித் திரண்டு சென்ருர் கள்.

திரு. வி. கலியாணசுந்தரனுர், நம் ஊனக் கண் களுக்குத் தோன்ருது, தம் இல்லாள் பக்கலில் நிற்கத், திருமணக் கோலத்துடன் அமர்ந்திருந்தார்.

இவ்விழாவில் கலந்து கொள்ளப் பொருளும் அறிவுமில்லேயே யென்று வருந்தி நின்ற எமக்கு ஒரு உணர்ச்சி உண்டாக, நாங்கள் இச்சிறு கட்டுரையை எழுதி முடித்தோம்.

அன்பு வாய்ப்பட்ட தமிழ்ப் பேராசிரியர் இதை ஏற்றுக் கொள்ளுவாராக.

கந்தசுவாமி
இராமசாமி

"வல்லா ராயினும் புறமறைத்துச் சென்ருேரைச்
சொல்லிக் காட்டிச் சோர்வின்றி விளக்கும்"

பல்கலே பேராசிரியர்

தெ. பொ. மீனுட்சிசுந்தரனுர் M.A., B.L., M.O.L,
அவர்க்கு எங்கள் நன்றி

வே. கந்தசுவாமி முதலியார்
சை. இராமசாமி நாய்க்கர், M. A.

அணிந்துரை

"புத்துலகம் பிறக்கப் போகிறது", என எல்லோரும் எங்கும் எதிர்பார்த்து நிற்கின்றனர். தமிழ்நாடு மிகப் பழைய நாடு. அங்கே புத்துலகம் பிறந்து தவழ்கிறது. அதன் உண்மையை உள்ளவாறே உணர்வார் மிகச்சிலரே. பாரதியார் பாடல் இந்த விடியற்காலச் சங்காக முழங்கியது; முழங்குகிறது. அதன் எதிர் ஒலிகள் பல எங்கும் இசைக்கின்றன. திரு. வி. கவின் பேச்சிலே ஒரு சத்தி பிறக்கிறது. தமிழிசை தமிழிசைச் சங்கமாகத் திரண்டு விளங்குகிறது. இந்த நூலை எழுதும் ஆசிரியர்கள் கையில் தமிழோவியம் தனிவீறு பெற்றுத் திகழ்கிறது. அவர்கள் தீற்றிய ஓவியங்கள் சிந்தாதிரிப்பேட்டை உயர்நிலைப் பள்ளியில் வருங்காலத் தமிழ்மக்கள் மனதைத் தமிழாய் உருப்படுத்த ஒளியுடன் விளங்குகின்றன.

அவ்விருவர் மனமும் பழந்தமிழ்ப்பாடலில் திளைக்கின்றது. புத்துலகம் பழைய உலகிலன்றோ வேரூன்றி நிற்கும். புதுமைக் கண்கொண்டு பழைமையை நோக்குகின்றனர். பழமையும் புதுமையாகவே பார்க்கின்றனர். பத்துப் பாட்டின் வலையில் சிக்காத மனம் பண்பட்ட மனமே அன்று. நக்கீரரே இந்நாளைய புத்துலக மக்களுக்குப் புத்துணர்ச்சி அளிக்கின்றார். நக்கீரர் பாட்டில் அவர்கள் பெற்ற இன்பத்தை நாமும் பெற இந்தச் சிறு கட்டுரையை எழுதியளித்துள்ளார்கள்.

எனது நண்பர் கந்தசாமியார் ஆங்கிலத்தில் அழகிய குழலோசைச் சொற்கள்கொண்டு உள்ளத்தை அள்ளும் உயிரோவியங்கள் வரையவல்லவர். அத்தகைய திறனைப் பயன்படுத்திச் சங்க இலக்கியங்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வருகிறார். ஓவியக் கலையில் அவரோடு ஒத்துழைத்த இராமசாமியாரும் பாட்டுக் கலையிலும் ஒத்துழைப்பது காணப் பெரிதும் மகிழ்கின்றேன். இந்த ஈடுபாட்டில் மகிழ்ந்து நின்ற நண்பர்கள் தமிழ் மக்களும் அறியத் தமிழிலேயே இங்கு எழுதுகிறார்கள். தமிழின் பெருமை அது.

தெ. பொ. மீனாட்சிசுந்தரன்,
M.A., B.L., M.O.L.

"கவிஞனும் கவிதையும்"

என்னுந் தலைப்பில் கவிஞர் பலரின் வாழ்கைக் வரலாறுகளும் அனுபவ உணர்ச்சிகளும் அவர்களுடைய கவிதைக்குட் புதைந்து கிடத்தலைத் தோண்டியெடுத்து அவர்களுடைய வாழ்க்கைப் போக்குக் குணாதிசயம் கொள்கை, அவர்களடைந்த இன்ப துன்பவுணர்ச்சி, அனுபவம் முதலியவைகளை ஆராய்ந்து வெளிப்படுத்த வேண்டுமென்று முடிவுசெய்திருக்கின்றோம். ஒவ்வொரு வருடைய வரலாறும் நூலிற் காணப்படும் அகச்சான்று களையே தக்க ஆதாரமாகக் கொண்டவையாதலின் இவ் வெளியீடுகளைப் படிக்கும் ஒவ்வொருவருக்கும் அவ்வாசிரி யரின் கவிமுழுவதையும் நன்கு பயின்றுணரவேண்டும் என்னும் அவாவும் ஊக்கமும் மிகுதியுமுண்டாம். இச் சிறு நூற்கள் ஒவ்வொரு கவிஞரிடத்திலும் அவர் தம் நூலினிடத்திலும் பேரார்வத்தினை வாசகர்கட்கு எழுப்ப வேண்டுமென்னும் எண்ணத்துடனே தான் வெளி வருகின்றன.



நக்கீரர்

மதுரைக் கணக்காயனர் மகனர் நக்கீரனர் இற்றைக்கு ௧௮00 ஆண்டுகளுக்கு முன் விளங்கிய சங்க காலத்தவர். இவர் தோன்றிய ஊர் மதுரை யென்றும், இவர் தந்தையார் ஓர் நல்லிசைப் புலவரென்றும் உய்த்துணர இவர் முழுப்பெயரே சான்ருகும். இவரைப்பற்றிப் பல கதைகள் தமிழ் நாட்டில் உலவி வருகின்றன. அவைகளின் உண்மையை அறிதல் எளிதல்ல. ஆனல் தருமியென்னும் அந்தணன் பொருட்டுச் சிவபிரானுக்கும் இவர்க்கும் வாதம் நிகழ்ந்ததாகவும், அவ்வாதத்தில் நக்கீரனர் சிவனேடு முரண்பட்டு "உடம்பெல்லாம் கண்கள் காட்டினும் குற்றம் குற்றமே" என்று மறுத்ததாகவும் ஒரு கதையுண்டு. இக்கட்டுரையின்கண் இக்கதையின் உண்மை நன்கு விளங்கும்.

காவியமும் ஓவியமும் சிறந்த கலைகள். அவை இரண்டினுக்கும் ஒற்றுமையும் வேற்றுமையு முண்டு. அதை இங்கு விளக்கிக் காட்டுவோம். ஓவியக்காரன் தன் கட்புலனுக்கும், தன் மனத்திற்கும் தோன்றியவற்றை ஒரு சிறிதும் உண்மையினின்றும் பிறழாது பல வண்ணங்கள்கொண்டு புனைகிருன். கண்டதைக் கண்டவாறே இயற்கைக்கு மாறுபடாமல் தீட்டும் திறன் உடையவனே சிறந்து விளங்கும் ஓவியக்காரன்.

நல்லிசை நூலறி புலவோரும் அவ்வாறே தாம் கண்ட பொருள்களை இன்னிசைச் சொற்கள்கொண்டு ஓவியமாகத் தீட்டிப் புலப்படுத்துகிறார். இயற்கைக்குப் பொருந்தாத உருவமைத்துக் காவியம் இயற்றுவது சீரிய நூலறி புலவர்களின் குணமன்று. ஒரு சிறிதும் மிகைபடாதும், குறைபடாதும் இன்னிசைச் சொற்கள் கொண்டு புனையும் காவியமே சிறப்புடையது. அவ்வாறு புனையும் கவியே சிறந்த கவி ; அதுவே கவிக்குச் சிறந்த குணமாகும். கீரர் அத்தகைய கூட்டத்தினரா, அல்லரா என்று அவர் இயற்றிய திருமுருகாற்றுப்படையினின்றும், நெடுநல் வாடையினின்றும் ஆராய்வோம்.

நெடு நல் வாடை என்பது, நல்லமழை, நல்ல இருட்டு என்றாற்போல, நல்ல வாடை, பனிக்கும் வாடை, நீண்டு வருத்தும் வாடைக் காற்று என்று பொருள்படும்.

புதுப்பெயல் பொழிய எங்கும் நீர்த்திரள் பெருகி ஓடுகின்றது ; மக்களும், விலங்கும், பறவையும் துன்புறுகின்றன ; மா மேயல் மறந்து அசைவற்று நிற்கின்றன ; மந்தி வாடைக் காற்றாலும், மழையாலும் வருந்தி உடல் நடுங்கி மரத்தின் செறிந்த இலைகளில் ஒடுங்குகின்றன ; பறவை குளிர் மிகையால் மரத்தினின்று செயலற்று வீழ்ந்து மடிகின்றன ; கறவை பான்முலை கவர்தல் நோனாது கன்றைக் கடிய வீசித் தள்ளுகின்றது ; கொடுகோல் கோவலர் வெள்ளத்தை வெறுத்து, வேறு புலம் நாடித் தங்கள் ஏறுடை இன நிரையை வேறு புலம் பரப்பிக் கவுள் புடையூ நடுங் கத் தீ மூட்டிக் குளிர்காய்கின்றனர்; உயிர் அற்ற குன்றும் குளிர்கின்றது. எங்கும் பனி, எங்கும் நீரோட்

டம் ; வானமும் இருண்டது, கதிரவனும் ஓடி ஒளிக்கின்றான். இரவு பகல் என்று அறியாது மனை உறை புறவின் செங்கால் சேவல் மன்றிலே சென்று தன் இன்புறு பெடையோடு இரைதேடி உண்ணுது செயலற்றுப் பரணில் அமர்ந்து கடுத்தகால் ஆறும்படி மாறிமாறி இருக்கின்றது ; பல்லுளைப் புரவி நடுக்குற்றுப் பல்பறை கொட்டிப் புல்லுணுது தெவிட்டுதலானே அதை வெறுத்துப் புலம்புகின்றன. எங்கும் குளிர், யாவர்க்கும் குளிர் ; வெளியிருப்பவர்க்கும் வானமளாவிய மாடமாளிகைகளி லிருப்பவர்க்கும் குளிர் ; மகளிரும் வாடைக்காற்றுப் பொறுக்க ஒண்ணுது கதவைத் தாளிட்டுப் பகுவாய்த் தூபமூட்டியில் நெருப்பெழுப்பிக் குளிர் காய்கின்றனர் ; ஆரமும், அகிலும், கண்ட சருக்கரையும் பெய்து புகைத்துத் தம் பல்லிருங்கூந்தலை உலர்த்துகின்றனர். குளிரால் குடத்தின் தண்ணீர் உண்ணுர், தண்ணறும் சாந்தமும் தம்மேனி பூசார், கோதையும் புனையார். செந்நிற விசிறி உறையிலிடப்பட்டுக் கொடுந்தறியில் தூங்கச் சிலந்தி அதைச்சுற்றி வானூலும் வேய்ந்துளது. சூல் கொண்டு முட்டையிட்டுப் பார்ப்பும் ஓம்பும்போலும் ; மடவரல் மகளிர் தட்டுக்கூடையில் பெய்த செவ்வி யரும்பு இதழ் அவிழ்பதம் கமழப், பொழுதறிந்து விளக்கேற்றி நெல்லும் மலரும் தூவி இறைவனை வழி படுகின்றனர். ஆடல் மகளிர் தண்மையிற்றிரிந்த இன் குரல் யாழைத்தம் கொம்மை வருமுலை வெம்மையில் தடவி நிலைகுலைந்த நரம்பைப் பண்முறையில் நிறுத்திப் பாடல் கொள்ளுகின்றனர்! யாழும் பனியால் நிலைகுலைந்துளது. அரசியும் தன் தலைவன் பிரிவாற்றுமையால் மிகக் கலக்கமுற்றுப், பூப்போல் மையுண்ட

கண் முத்துப்போல் நீர்சொரிய வருந்திக் கிடக்கிருள். பாசறையின்கண் அரசன் நள்ளிரவிலும் பள்ளி கொள்ளாது பெருஞ்செயல் ஆடவர் விழுப்புண் காணத் திரிகின்ருன். போர்வீரர் அமர்ந்திருக்கும் கூடாரத்திலும் வடந்தை தண்வளி வீசப் பாண்டில் விளக்கின் பரூஉச்சுடர் தென்பால் சாய்ந்து அலேகின்றது.

எங்கும் தண்வளி ; புலத்திலும் தண்வளி ; மன்றத்திலும் தண்வளி ; மாளிகையிலும் தண்வளி ; அரசிப் பள்ளியிலும் தண்வளி ; பாசறைக் கண்ணும் தண்வளி ; மலேயிலும் தண்வளி. செங்கால் புறவும் வருந்துகின்றது, பறவையும் வருந்துகின்றன, துதிக்கை அறுபட்ட களிறும், மாவும், பரியும் வருந்துகின்றன ; கோவலரும் மகளிரும் வருந்துகின்றனர் ; அரசனும் அரசியும் வருந்துகின்றனர் ; மறவரும் வருந்துகின்றனர்.

நீண்ட பனிக்கும் வாடையைப் படிக்கும் யாமும் அந்தக் குளிர் மிகையால் வருந்துகின்றனம். இயற்கையை வரைந்துகாட்டும் திறனேக் கவி எவ்வளவு சிறப்பாகக் காட்டியுள்ளார்! இதுதான் காவியம்! இதுதான் சொற்கொண்டு புனேந்த ஒப்பில்லாத ஓவியம்! நக்கீரனூர் சிவபிரானுடன் முரண்பட்டு வாதித்தார். ஏன் வாதிக்கமாட்டார்? அவர் கொள்வது இயற்கை உண்மையே. இவ்வாறு புனேந்து கூறும் ஆற்றல் உடையோர் எத்தனே பேர்?

வெள்ளிபோல் மினுக்கும் கெண்டை மீன்கள் புதுப்பெருக்கில் துள்ளித்துள்ளி ஓடுகின்றன. பைங்கால் கொக்கும், செவ்வரி நாரையும் இருஞ்சேற்றுக் கரையில் ஓடுநீர் நோக்கி நெடிதிருந்து மழைத்துளி

யையும் பேணுது புலவுக்கயலே வயிறு நிரம்பத் தின்கின்றன. இப்பெரும்பெயலாலே கலித்த நெற்பயிர்கள் கதிர்முற்றித் தலேசாய்த்து வணங்கா நிற்கின்றன. கமுகின் பசுங்காய் இன்சேறு கொண்டு, புடைதிரண்டு கொத்துக்கொத்தாய் முதுமரத்தின் கழுத்தில் தூங்கா நிற்கின்றன. முசுண்டையின் வெண் பூவும், பீர்க்கத்தின் பொன்பூவும் அழகு பெற்று விளங்குகின்றன. மெய்வலி பொருந்திய மிலேச்சர் வண்டு மூசும் தேறல் உண்டு மகிழ் சிறந்து துவலேத் தண்துளி பேணுது அகல் நெடு தெருவில் திரிகின்றனர்.

நெடு நல் வாடையின் குளிர் மிகையால் வருந்துமவற்றைச் சித்தரித்துக் காட்டிய நக்கீரனுர், பனிக்கும் வாடையில் இன்புறுவனவற்றையும் கூறியுள்ளார். துன்பமின்றி இன்பமில்லே, இன்பமின்றித் துன்பமில்லே என்னும் உண்மையை விளக்கிக் காட்டுகிருர்.

இதோ மற்ருெரு காட்சி:—தலேயிலோ நெய்யற்று, புழுதிபடிந்த செஞ்சடைமயிர் முடிமுடியாய்த் தொங்குகின்றது; நெருப்புப்பொரி பறக்கும் விழிப்பசுங் கண்கள் சுழல்கின்றன; கூகையும் நஞ்சுகொண்ட அரவமும் ஒன்ருேடொன்று முரண்பட்டு நெளிந்து இரு செவியினின்று நீண்டு, தூங்கும் முலேதொட்டுத் தொங்காநிற்கின்றன; நிணந்தின்ற முழைஞ்சு வாயினின்றும் செந்நீர் சொட்டுச் சொட்டாயும் தாரை தாரையாயும் விழுகின்றது; குகைவாய் நிறையச் சிறிதும்பெரிதுமான கோரைப்பற்கள்பொலிகின்றன; உடலோ பனேமுதல் போன்று சருச்சரை கொண்டு மடிப்புற்றுத் தோன்றுகின்றது; தொட்டுண்ட கண்க

ளற்ற கருந்தலை, களம்பாடியாடும் பேய்மகள் கையில் பொருந்தி, முடை நாற்றத்தைப் பரப்புகிறது; குருதி தோய்ந்த விரல்களின் வளைந்த கூரிய நகங்கள் செந்நீர் சொட்டுகின்றன.

எங்கும் பொறுக்க ஒண்ணுப் புலால் நாற்றம்; எங்கும் காண ஒண்ணுக் குருதி வெள்ளம்; குடலை முறுக்குகின்றது, உடலும் நடுங்குகின்றது. என்ன அருவருப்பான அச்சமுறுத்தும் தோற்றம்! தாங்க முடியாது கண்ணையும் நாசியையும் மூடிக்கொள்ள வேண்டியதுதான். துயில் கொள்ளும்போது நாம் இப் பேய்மகளைக் கனவில் காணினும் மயிர் சிலிர்த்து, உடல் நடுங்கி அலறி எழுவோம். சூல் கொண்ட மகளிர் இதைக் கண்டாலும், கேட்டாலும், படித்தா லும் சூல் அழிந்து துன்புற்று நோய்வாய்ப் படுவர்.

நக்கீரனார் தம் சிறந்த ஓவியத் திறனைச் சொல் கொண்டு காவியமாகச் சித்தரித்துக் காட்டுகிறார். இத்துடன் இதை விட்டாரே அதுவே போதும்! வண்ணத்திப் பூச்சியைக் கொழுந்துவிட்டு எரியும் சுடர் இழுப்பதுபோல் பேய்மகளும் நம்மை ஈர்க் கின்றாள். நாம் அவளிடமிருந்து பெயர்ந்து வேறு புலம் செல்லுவோம்.

அழகையே காவியத்தின் உயிர்நிலையாகக் கொண்ட கீட்ஸ் (Keats) எனப் பெயர்பெற்ற ஆங் கிலக்கவி, ஸெயின்ட் ஆக்னிஸ் ஈவ் (The Eve of St. Agnes) என்னும் பாட்டில், மாடிலேன் (Madeline) என்ற பெண்மணியின் பள்ளி அறையையும், சேக் கையையும் பின்வருமாறு சித்தரித்துக் காட்டியுள் ளார்.

மூன்று வேல் வளைவு (Gothic arch) கொண்ட சாலேகத்தின் தலைப்பில், கைவல் கம்மியன் கூருளி கொண்டு மரத்தில் யாத்த பூங்கொடியொன்று பல வடிவப் பழங்களும், பூக்களும், நிறைந்து பின்னித் திகழ்ந்து பொலிவுற்றுத் தொங்கா நின்றது. ஊட்டிய வண்ணத்தால் ஒளிர்தரும் பல வடிவக் கண்ணடித் துண்டுகள் அழகாக இணைந்து புலிப்பொறி (Tiger moth) என மின்னிப் பொலியும் பட்டுப் பூச்சிகளே போலக் காட்சியளிக்கும் சாளரங்களின் வெளியிடம் முழுதும் மொய்த்து நின்றன. வெண் சாந்து பூசிய சுவரில் ஆங்காங்கு கால வரிசையாக இருப்புச் சட்டையும், இருப்புத் தலை முடியும், வேலும், வாளும், மழுவும் தூங்கா நின்றன. அவ்வரிசைகளின் இடையிடையே மாசற விளங்கும் பல வண்ணங்கள் கொண்டு அந்தந்தக் காலத்தின் அரசர், அரசியர் உருவங்கள் தீட்டப்பெற்ற கேடயங்கள் பொறிக்கப் பெற்றிருந்தன. ஒளி விடும் சாயம் தோய்த்த திரையில் பலநிறப் பட்டுநூல் கொண்டு பாய்ந்து செல்லும் பரியும், வெள்ளெயிற்று நாயும், வரிப் பொறித்த வல்லூறும் ஆடும் வேட்டைக் காட்சி சித்தரிக்கப்பட்டிருந்தது. அவ்வறையின் தரையில் பொன் தகடு கொண்டு கோடிட்ட விரிப்பு விரிக்கப்பட்டிருந்தது. ஸெயின்ட் ஆக்னிஸ் நாள் இரவில் உணவற்றுப் பட்டினி கிடந்து முகமேலாய் இருக்க, பக்கலிலும், முன்னும் பாராது வானம் நோக்கித் தன் விருப்பத்தை வேண்டி, கன்னிகை ஒருத்தி துயில்கொண்டால், இனிய நள்ளிருளில் தன் காதலனின் இன்புறும் காட்சி கிடைக்கும் என்னும் நம்பிக்கை உண்டு. அதற்கு இணங்க, முழங்கால் படியிட்டுத் தன் இரு

கைகளையும் கழுத்துத் தாழ்வடத்தில் தொங்கும் ஒளிர்விடும் செவ்வந்திக்கல் (Amethyst) பொதிந்த சிலுவையில் அணைத்து இறைவனை வணங்கி எழுந்து, மாடிலேன் (Madeline) தன் தலையில் அணிந்திருந்த முத்து மாலையையும் கொம்மை வரு முலையின் வெம்மையால் சூடுற்ற பலமணி இழைத்த மார்புக் கச்சத்தின் ஊசியையும் களைந்த பின்னர்த், தன் மேல் சட்டையைத் தோளினின்று முழங்கால்வரை சிறிது சிறிதாக நழுவவிட்டு நீரர மகள்போல் துகிலற்றுப் பொலிந்து நின்றாள். எல்லாம் களைந்த பிறகு லாவெண்டர் (Lavender) பூமணங் கொண்டு கழுவுற்ற தூமடி விரித்த சேக்கையில் அமர்ந்து அவிழாத நீலோற்பல மலர் போன்ற மூடிய கண்ணளாய்த் துயில் கொண்டாள்.

திரையின் பின் மறைந்திருந்த அவள் காதலன் வெளிவந்து, பொன் இழை கொண்டு பூ வேலை செய்த கறுப்பு விரிப்புப் போர்த்த பீடத்தின்மேல், ஆப்பில் (Apple), திராட்சை, பேரி (Pear) வெள்ளரிப் பழங்களை வெள்ளிக் கம்பிகளால் முடைந்த பழக் கூடையில் குவித்து, பாகுடன் கலந்த பழங்களும், பேரீச்சமும், நறுமணமும் தீஞ்சுவையும் கொண்ட பல பண்டங்களும் பரப்பிய பளபளப்பான தட்டங்களின் இடையே பொலிவுபெற வைத்தான். நறுமணமும், முழுமதியின் தண்ணொளியும் அவ்வறையின் நாற்புறமும் விரவுற்று உலாவின.

கோப்பெருந்தேவி, அரசன் பிரிவாற்றாமையால் மனக்கலக்கமுற்றுப் பள்ளி அறையின் பாண்டிலில் அமர்ந்திருப்பதை நக்கீரனார் நெடு நல் வாடையில் சித்தரித்துக் காட்டியுள்ளார். கீட்ஸ் என்னும் ஆங்

கிலக்கவி தீட்டிய காட்சியை இதனுடன் ஒத்துப் பார்த்தால் இவ்விருவருக்கும் உள்ள வேற்றுமையும் ஒற்றுமையும் தெற்றென விளங்கும்.

முற்றிய யானைக் கொம்புகொண்டு சூல் கொண்ட மகளிர் வீங்கு முலை கடுப்ப, குடம் கடைந்து, கூருளிகொண்டு செறியிலை செதுக்கிய தண்டமைத்து, உள்ளிப் புட்டில் போன்ற அடியுடைய வலிய கால் திருத்திக், கட்டிலின் சட்டத்தைச் சுற்றி முத்துத் தாவடங்கள் நாலவிட்ட சாலேகங்களை நாற்றி, ஆணி முடுக்கிப் பொலிவுபெறச் செய்து, நான்கு சட்டங்களி னிடையே புலிப்பொறி கொண்ட கச்சம் வேய்ந்த சட்டத்தைப் பொதிந்து, அதன்மேல் தூமயிர் ஊட்டி வயமான் வேட்டம் பொறித்த சேக்கையையும், அச் சேக்கையின்மேல் முல்லை இதழ் ஊட்டிய மெல்லி தான சேக்கையையும் விரித்துக், கடையாக நறு மணங் கொண்ட பூ இதழ் பரப்பிய கழுவுறுக் கலிங் கத் தூமடி விரிப்பினுள் அன்னத்தின் தூமயிர் இட்டுச் சிறப்பாகப் பாண்டில் அமைக்கப் பெற்றிருந் தது.

பட்டு நீக்கி நூல் கலிங்கம் உடுத்து, அலர்முலை ஆகத்து முத்துமாலை அற்றுப் பின்னமைந்த தாலி ஞாண் ஒன்றே தொங்க, நெய்யற்ற உலறிய மயிர் பொலிவுற்ற நெற்றியில் வீழப், பெரும்பொன் குழை நீக்கிச் சிறிய காதோலை பூண்டு, பொன் தொடி நீக்கிச் சங்கு வளையும் சிவப்பு நோன்பு நூலும் மயிரொழுகிய கையில் அணிந்து, செவ்விரலில் வாளை மீனின் பகுத்த வாய்போன்ற முடக்கு மோதிரம் இட்டு, நரையுற்ற செவிலியும், கொடியிடையும் பணைத்தோளும் பொருந்திய சேடியரும் இன்சொல் சொல்லி நிற்கத்

துயர் நீங்காது பூ இதழ்களினின்று பனி முத்து முத் தாய்ச் சொட்டுவதுபோற், கண்கடையில் நீர் சொரிய, முகமேலாய்ச் சேக்கையில் அமர்ந்திருந்த அரசி விழித்த கண்ணளாய் மேற்கட்டிலின் தட்டிலில் மேடராசியி னிடையே வரைந்திருந்த உரோகிணியை நோக்கி அவள் போல் தலைவனினின்றும் பிரியாப் பெரும் பேற்றை விரும்பினள்.

கீட்ஸ், லாவெண்டர் (Lavender) பூ மணங் கொண்ட கழுவுறு தூமடி விரித்த சேக்கை என் கிருர் ; கீரர், 'காடி கொண்ட கழுவுறு கலிங்கத்துத், தோடமை தூமடி விரித்த சேக்கை' என்கிருர் ; கீட்ஸ், கூருளி கொண்டு மரத்தில் பழமும் பூவும் கொடியும் அமைத்த கோதை விளங்கும் சாலேகம் என்கிருர் ; நக்கீரர், 'கூருளிக் குயின்ற வீரிலையிடை யிடுபு, புடை திரண்டிருந்த குடத்த விடைதிரண் டுள்ளி நோன்முதல் பொருத்தியடியமைத்துப், பேரள வெய்திய பெரும் பெயர்ப் பாண்டில்' என்கிருர் ; கீட்ஸ், அவிழாத நீலோற்பல மலர் போன்ற மூடிய கண்ணளாய் மாடிலேன் தூங்கினுள் என்கிருர் ; நக்கீரர், 'மாயித ழேந்திய மலிந்து வீழரிப்பனி, செவ் விரல் கடைக்கண் சேர்த்திச் சில தெரியா' என்கிருர் ; கீட்ஸ், பல நிறப் பட்டுநூல் கொண்டு பாய்ந்து செல் லும் பரியும் வெள்ளெயிற்று நாயும் வரிப்பொறித்த வல்லூறும் கூடிய வேட்டைக் காட்சி திரையில் சித்த ரித்து இருந்தது, என்கிருர் ; நக்கீரர், 'வயமான் வேட்டம் பொறித்த சேக்கை' என்கிருர். இவ் விரண்டு பாட்டின்கண்ணுள்ள ஒற்றுமை இவை தான். இருவருக்கும் ஒரே ஆசிரியர், இருவருக்கும்

ஓரே நூல்; தங்கள் கட்புலனே ஆசிரியர், இக் காட்சி தோன்றும் புவியே சிறந்த நூல்.

இருவரும் யாழ்போல் இசைக்கும் இன்னிசைச் சொற்கள் அமைத்து அகவரி (Lyric poetry) பாடும் திறன் பெற்றவர். கீட்ஸ் பதினெட்டாம் நூற்றுண்டு இறுதியில் தோன்றியவர், நக்கீரர் இரண்டாம் நூற்றுண்டு இறுதியில் தோன்றியவர். ஆயினும் அவ் விருவர் திறனும் எவ்வளவு ஒற்றுமை பெற்று விளங்குகிறது! எந் நாட்டாராயிருந்தாலும், எக்காலத்தினரா யிருந்தாலும் சீரிய கவிகளும் ஓவியக்காரர்களும் இயற்கைக்கு ஒரு சிறிதும் பிறழாது சித்தரிக்கும் வன்மை யுடையவர்கள். ஆங்கிலக் கவிகளுக்கும் பத்துப் பாட்டு நல்லிசை நூலறி புலவோர்க்கும் இடையே இத்தகைய ஒற்றுமையைப் பல இடங்களில் காணலாம்.

"கடுவொ டொடுங்கிய தூம்புடை வாலெயிற்
றழலென வுயிர்க்கு மஞ்சுவரு கடுந்திறற்
பாம்பு படப் புடைக்கும் பல்வரிக் கொடுஞ்சிறைப்
புள்ளணி நீள்கொடிச் செல்வனும்

முருகு, (148—151.)

பாம்பு தூம்புடைப் பல்லின் வாயிலாக நச்சுப் பையிலிருந்து விடத்தைப் பெய்து உடலில் புகுத்திக் கொல்லுகிறது. அழல்போல் வெம்மை கொண்டு வருத்துகிறது. இக்காலத்து மருத்துவர் ஊசி குத்துவதற்குப் பயன்படுத்தும் ஊசியும் இதுபோல் அமைத்துளது. இதை நக்கீரர்பால் கற்றனரோ!

இவ்வாறு இயற்கைப் பொருள்களை நுண்ணிதாகச் சித்தரிக்கும் ஆற்றல் ௨௦௦௦ ஆண்டுகளுக்கு முன்னே கவிகளின் இடையே இருக்க, ௨௦௦௦ ஆண்டு

கள் கழிந்த இக்காலத்து இல்லாதது வருந்தத் தக்கதே.

இக்காலத்திலோ, அறிவு ஊட்டும் பள்ளியிலும் கல்லூரியிலும் பொருள்களை நேரே காண ஒட்டாது நூல்களில் காணும்படி சொல்லிக் கொடுக்கின்றனர். 'காக்கைக்கு மூக்கு நீளம்,' 'தேங்காய் கறிக்குதவும்,' 'தேள் கொடுக்கினல் கொட்டும்,' என்றும் பாடப் புத்தகங்களில் காணலாம். இவை மாணவர் அறியா அரும் பெரும் பொருள்கள் போலும்!

நக்கீரனார் இயற்கை நூலும் கற்றார் போலும். பாண்டிலும் சேக்கையும் அமைப்பர். அவர் தீட்டி யுள்ள சித்திரத்தைக் கொண்டு கடுகளவும் பிறழாது பாண்டிலையும் சேக்கையையும் அமைக்கலாம். கோப் பெருந் தேவி உயிர்பெற்று அவற்றைக் காணின் வியப் புற்றுக் கண்விழித்து மூக்கின்மேல் விரல் வைத்து அசையாது நிற்பள். இதுதானா? கீரனார் ஓவியமும் தீட்டுவர், கோயிலும் அமைப்பர். அத்திறனையும் எடுத்துரைப்போம்.

நுண்கண் வினைஞர் (artists) பெரிய ஓவியக் குச்சு (brush) கொண்டு வண்ணத்தை வாரிப் பூசி விரைவில் சித்திரம் புனைவர். அவ்வோவியங்களை அண்மையினின்று பார்த்தால் ஒன்றும் புலப்படாது. பத்தடி சேண்மையின் நின்று பார்த்தால் அவை உயிர் பெற்று விளங்கும். இவ்வாறு புனைவதைச் சாயல் ஓவியம் (Impressionist art) என்பர் மேல் நாட்டார்.

சிறு ஓவியக் குச்சுகள் கொண்டு விரிவாகவும் நுண்ணிதாகவும் சித்தரித்துக் காட்டும் படமும் உண்டு. அவ்வாற்றல் உடையாரை ரவேலுக்கு

முன்னிருந்தவர் (Pre-Raphaelites) என்று சொல்லு வர். இவ்விரு திறனையும் நக்கீரனாரிடம் காண்கிறோம். சிற்றுளிகொண்டு பாண்டிலை நுண்ணியதாகப் புனை கிறார். இரண்டு சேக்கையையும் அவ்வாறே நுட்ப மாய் அமைக்கிறார். ஆனால் ஒரு சேக்கையை மட்டும் விரித்துக் கூறுது, 'வயமான் வேட்டம் பொறித்த சேக்கை' என்கிறார். படிப்போர் மனக் கற்பனை வளர்ச்சி குறித்தே விரித்துச் சொல் லாது விடுத்தனர்போலும்.

வயமான் எதிர்த்து வந்தாலும் வரலாம்; முதுகு காட்டி ஓடினாலும் ஓடலாம்; வேட்டை நாய்கள் பின் தொடர்ந்து அதன்மேல் பாய்ந்தாலும் பாயலாம்; அதைச் சுற்றி வளைத்துக் குரைத்து எதிர்க்கலாம்; வயமான் பாறைகளினிடையே ஒளிந்திருக்கலாம். இவ்வாறு பல படங்கள் இக்காவியத்தினின்று வரைய லாம். ஓவியத்திற்கு வரம்புண்டு. காவியத்திற்கோ வரம்பில்லை. இதுபற்றியே காவியம் ஓவியத்தினும் சிறந்தது.

அரசன் கோயிலையும் நக்கீரனார் இவ்வாறே வரைந்துள்ளார்.

"..............................மாதிரம்
விரிகதிர் பரப்பிய வியல்வாய் மண்டில
மிருகோற் குறிநிலை வழுக்காது குடக்கேர்
பொருதிறஞ் சாரா வரைநா ளமயத்து."

நெடு. 72-75.

நடுவேளையை வகுக்கும் முறையை எவ்வளவு நுட்பமாகவும் சுருக்கமாகவும் சொல்லி விளக்குகிறார்! வாயிலையும் கதவையும் விரித்துக் கூறியவர் கோயிலை விரித்தும் சுருக்கியும் புனைந்துள்ளார். என்னதிறன்! என்ன நுட்பம்!

பத்துப்பாட்டு பாடிமிழ் தண்கடல்; ஒளிர்விடும் மணிச்சுரங்கம். அக்கடலினுள் புகுந்து சங்கையும் முத்தையும் பவளத்தையும் வாரிவாரி எடுக்கலாம். அச்சுரங்கத்தினின்று மாணிக்கத்தையும், நீலமணியை யும், பச்சைமணியையும், வைடூரியத்தையும் கோமே தகத்தையும் கிண்டிக் கிண்டி எடுக்கலாம். எல்லா வற்றையும் எடுத்துக்காட்டின் தெவிட்டும். படிப் போர் தாமே கண்டு களிக்கச் சிலவற்றையே எடுத் துக் காட்டியுள்ளோம்.

....விழுமிய
பெறலரும் பரிசி னல்குமதி பலவுடன்
வேறுபஃ றுகிலி னுடங்கி யகில் சுமந்
தார முழுமுத லுருட்டி வேரற்
பூவுடை யலங்குசினை புலம்ப வேர்கீண்டு
விண்பொரு நெடுவரைப் பரிதியிற் றொடுத்த
தண்கம ழலரிறால் சிதைய நன்பல
வாசினி முதுசுளை கலாவ மீமிசை
நாக நறுமல ருதிர யூகமொடு
மாமுக முசுக்கலை பனிப்பப் பூநுத
லிரும்பிடி குளிர்ப்ப வீசிப் பெருங்களிற்று
முத்துடை வான்கோடு தழீஇத் தத்துற்று
நன்பொன் மணிநிறங் கிளரப் பொன்கொழியா
வாழை முழுமுத றுமியத் தாழை
யிளநீர் விழுக்குலை யுதிரத் தாக்கிக்
கறிக்கொடிக் கருந்துணர் சாயப் பொறிப்புற
மடநடை மஞ்ஞை பலவுடன் வெரீஇக்
கோழி வயப்பெடை யிரியக் கேழலொ
டிரும்பனை வெளிற்றின் புன்சா யன்ன
குரூஉமயி ரியாக்கைக் குடாவடி யுளியம்
பெருங்கல் விடரளைச் செறியக் கருங்கோட்

டர்மா நல்லேறு சிலைப்பச் சேணின்
றிழுமென விழிதரு மருவிப்
பழமுதிர் சோலை மலைகிழ வோனே.

முருகு. 290—317.

சேணின்று மலை அருவி வீழ்ந்து, தவழ்ந்து, குதித்துப், பரந்து செல்வதை இவ்வடிகளில் இசைக்கும் இன்சொல்கொண்டு ஆக்கியுள்ளார். இவ்வடிகளை உரக்கப் படித்துச் செவிசாய்த்துக் கேண்மின். ஒரு முறைக்குப் பன்முறை படிமின். அதில் பிறக்கும் ஒலி மலை அருவியின் ஒலியே. சில இடங்களில் அருவி அமைதியாய்ச் சலசலவெனச் செல்லும்; சில இடங் இடங்களில் தத்துற்றுப் பாறையில் வீழ்ந்து ஒலிக்கும்; சில இடங்களில் பாறைகளினிடையே புகுந்து தளதள வென்று கொந்தளிக்கும். காவியமும் இன்னிசைபெற்று விளங்கச் சொற்களைத் தேர்ந்தெடுத்து இவ்விறுதி அடிகளை அமைத்துள்ளார். நக்கீரனார் இன்னிசைப் புலவரும்போலும்.

மதுரைக் கணக்காயனார் மகனார் இயற்கைத் தோற்றத்தின் வாய்மையையே காவியத்தின் உயிர் நிலையாகக்கொண்ட நல்லிசைப் புலவர். இக் கட்டுரையின் தலைப்பில் எடுத்துக்கூறிய கட்டுக் கதை இவ்வுண்மையை விளக்குவதற்காகவே பிற்காலத்தில் பிறப்பிக்கப்பட்டது. அக்காலத்தில் பொற்றாமரைக் குளமேது? மீனாட்சி அம்மன் கோயிலேது? இவை அண்மையில் தோன்றியவையே. சில மக்களினிடையே கட்டுக் கதை மெய்க்கதையாகும். மெய்க் கதையும் கட்டுக் கதையாகும். அறிவுடையோர் வாய்மையையே கொள்ளுவர்.

இக்கட்டுரையின் நோக்கம் இக்காலத்து உரை ஆசிரியர் நோக்கமல்ல. இக்காலத்து மாணவரிடம் மூலத்தைப் பலகால் படித்துப் படித்துச் சுவைத்துச் சுவைத்து இன்புறும் வழக்கம் இருபது முப்பது ஆண்டுகளாகக் குன்றிக்கொண்டே வருகிறது. இது வருந்தத்தக்கதே. மூலத்தை நழுவவிட்டு உரையையே மறைநூலாகப் பெரிதும் இக்காலத்தார் போற்றுவர். அது அறிவு வளர்ச்சிக்கும் இன்ப நுகர்ச்சிக்கும் முட்டுக்கட்டையா யிருப்பதை யார் அறிவர்? எமது நோக்கம், தமிழ் அன்பர் மூலத்தையே படித்து இன்புறவேண்டுமென்பதே. சில காவிய நுட்பங்களையே வழிகாட்டியாக எடுத்துரைத்தோம். மூலத்தைப் பல கால் படிப்போர்க்கு அவரவர் மனப்பான்மைக்குத் தக்கவாறு பல புதுமைகள் தோன்றும். அளவில்லா இன்பமும் பிறக்கும்.

2672

OTTRUMAI OFFICE TAMIL PUBLICATIONS

General Editor: M. E. VEERABAHU PILLAI

No.	Title		Rs.	A.
1.	Tamil and the Tamils	...	3	0
2.	The Prehistoric Tamils	...	1	12
3.	Tamilagam	...	2	8
4.	Tamilar Charitiram	...	2	4
5.	Treasure of General Knowledge	...	0	10
6.	Kallada Vachanam	...	1	8
7.	Kalithogai Vachanam	...	1	8
8.	Pathuppattu Vachanam	...	1	0
9.	Paripadal Vachanam	...	1	0
10.	Pathitrupathu Vachanam	...	1	0
11.	Purapporul Vilakka Vachanam	...	1	0
12.	Kurunthokai Vachanam	...	1	0
13.	Akananuru Vachanam 1st part	...	1	0
14.	Do 2nd part	...	1	0
15.	Do 3rd part	...	0	12
16.	Thembavani Vachanam	...	0	8
17.	Studies in Chilappathikaram	...	1	8
18.	Pulamai Vithagabodhini	...	1	8
19.	Vinotha Charitiram	...	0	12
20.	Rajarajan	...	1	8
21.	Tamil Nattu Muventhar	...	0	12
22.	Nine Lilies of the Tamil Land	...	0	10
23.	Story of Chilappathikaram	...	0	8
24.	Sundarar	...	0	10
25.	Greatness of love	...	0	8
26.	Arivuraikovai	...	0	10
27.	Arivuraimalai	...	0	12
28.	Thirukkural with glossary	...	1	4
29.	Treasure of General Knowledge Vol. II	...	0	12

2672

OTTRUMAI OFFICE,

Theagarayanagar, MADRAS.